
# தேர்வுக் களம் 8



**கேள்விகளுக்குச் சரியான விடையைத் தெரிவு செய்க.**

1. படம் 1, ஓர் ஆராய்வைக் காட்டுகிறது.




படம் 1

இவ்வாராய்வின் முடிவு என்ன?

A. காற்று வெற்றிடத்தை நிரப்பும்.
B. காற்றுக்கு வடிவம் உண்டு.
C. காற்றுக்குப் பொருண்மை உண்டு.
D. காற்று எல்லாத் திசைகளுக்கும் செல்லும்.

2. படம் 2, ஒரு செயற்பாங்கைக் காட்டுகிறது.




படம் 2

இப்படத்தில் காட்டப்படும் செயற்பாங்கு என்ன?

A. உலர்தல்
B. திண்மமாதல்
C. உறைதல்
D. கொதித்தல்

3. படம் 3, மூன்று பாத்திரங்களில் நீர் நிரப்பப்பட்டுள்ளதைக் காட்டுகிறது. அப்பாத்திரங்கள் வீட்டுக்கு முன்புறம் 3 மணி நேரத்திற்கு வைக்கப்பட்டன.




படம் 3

அதிகமான நீரிலிருந்து குறைவான நீர் இருக்கும் பாத்திரம் என நிரல்படுத்துக.

A. J, K, L
B. K, L, J
C. L, K, J
D. J, L, K

4. கீழ்க்காணும் தகவல்கள் நீர்ச்சுழற்சியைக் காட்டுகின்றன.

P : நீர்நிலைகளில் உள்ள நீர் உலர்ந்து ஆவியாகுதல்
Q : ..............................................................
R : நீராவி மேகமாக மாறுதல்
S : நீராவி திண்மமாகி மழையாகப் பொழிதல்

Qவுக்கு ஏற்ற கூற்றைத் தேர்ந்தெடுத்திடுக.

A. வளிமம் திண்மமாகுதல்.
B. லேசான நீராவி மேல் நோக்கிச் செல்லுதல்.
C. நீராவி வானில் பறந்து செல்லுதல்.
D. நீராவி மேல் சென்று பனியாக மாறுதல்.


5. நீர்ச்சுழற்சி நடைபெறவில்லையென்றால் என்ன நேரிடும்?

A. உலகத்தின் வெப்பநிலை குறையும்.
B. தாவரங்கள் செழித்து வளரும்.
C. உலகத்தில் நீர்வளம் குறையும் விடும்.
D. கடல் நீர் வற்றும்.



LIVEWORKSHEETS

6. படம் 4, ஓர் ஆராய்வைக் காட்டுகிறது.



படம் 4

இந்த ஆராய்வின் நோக்கம் என்ன?

A. காற்றுக்கு எடை உண்டு என்பதை ஆராய.
B. காற்று வெற்றிடத்தை நிரப்பும் என்பதை ஆராய.
C. காற்றை அடர்வழுத்த முடியும் என்பதை ஆராய.
D. காற்றுக்கு நிலையான வடிவம் உண்டு என்பதை ஆராய.

7. மாதவி நிலைக்கண்ணாடியின் முன் நின்று காற்றை ஊதினாள். கண்ணாடியில் நீர்த்துளிகள் தென்பட்டன. இது நடைபெற காரணமாகிய செயற்பாங்கு என்ன?

A. உலர்தல் B. திண்மமாதல் C. உறைதல் D. ஆவியாதல்

8. படம் 5, விஷ்ணு அருந்திய குளிர்ந்த ஆடிக்கிண்ணத்தைச் சுற்றிலும் நீர்த் துளிகள் இருப்பதைக் கண்டறிந்ததைக் காட்டுகிறது.



படம் 5


ஆடிக்கிண்ணத்தைச் சுற்றிலும் நீர்த்துளிகள் தோன்ற காரணம் என்ன?

A. ஆடிக்கிண்ணத்தில் உள்ள பனிக்கட்டி உருகுவதால்.
B. ஆடிக்கிண்ணத்தைச் சுற்றி வெப்பக்காற்று இருப்பதால்.
C. ஆடிக்கிண்ணத்தைச் சுற்றி குளிர்ந்த காற்று இருப்பதால்.
D. ஆடிக்கிண்ணத்தில் உள்ள நீர் நிரம்பி வெளியே வழிவதால்.

9. மதுமிதாவின் அம்மா துணிகளைத் துவைத்து உலர வைக்க எண்ணினார். ஆனால், மழை பெய்து கொண்டிருந்தது. இப்பிரச்சினையைக் களைய மதுமிதாவின் அம்மா என்ன செய்யலாம்?

A. மழை நிற்கும் வரை காத்திருக்க வேண்டும்.
B. காற்றாடியின் கீழ் உலர வைக்க வேண்டும்.
C. துணிகளை மீண்டும் துவைக்க வேண்டும்.
D. துணிகளை இஸ்திரிப் பெட்டியைக் கொண்டு உலர்த்த வேண்டும்.

10. படம் 6, வளிமத்தின் ஒரு தன்மையைக் காட்டுகிறது. அந்தத் தன்மை என்ன?



படம் 6

A. காற்றை அடர்வழுத்த முடியும்.
B. காற்றுக்கு எடை உண்டு.
C. காற்று வெற்றிடத்தை நிரப்பும்.
D. காற்றுக்கு நிலையான வடிவம் இல்லை.

11. பின்வரும் பொருள்களில் எது மூன்று பருப்பொருள் நிலைகளிலும் தோன்றும்?

A. மேகம் B. நீர் C. ஆடி D. கல்



LIVEWORKSHEETS